DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 32/2015**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW6 | Caste | : | |
| Name | : | வினைதீர்த்தான் | Age | : | 60 |
| F/N | : | ஆறுமுகம் | Occupation | : | சிறப்பு சார்பு ஆய்வாளர்(ஓய்வு) |
| Village | : | மகாத்மா காந்தி நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of August 2024.

**08.08.2024**

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வளாகராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது இராமநாதபுரம் மாவட்டம் மகாத்மா காந்தி நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 15.10.2014-ம் ஆண்டு மாவட்ட குற்றப்பிரிவில் நான் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து C.No. D1/203/FRB/14 dated. 12.06.2014 இல் வரப்பெற்ற மனுவிற்கு காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலைய குற்ற எண். 43/2014 பிரிவுகள் 468, 471, 420 இதச வாக வழக்குப்பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் இணைத்து சமூக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளருக்கு சமர்ப்பித்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

12.06.2014-ம் தேதியிட்ட மனுவின் பேரில் தான் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான்கு மாதங்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முறையாக விசாரணை செய்யாமல் பொய்யான புகாரின் மீது 4 மாதங்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் நான்கு

மாதங்கள் கழித்து முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2 வது மற்றும் 3 வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2 வது மற்றும் 3 வது எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கூறுகிறார்.

**மறுவிசாரணை – இல்லை**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**